18.07.2025

O.S.No.29/2014

வா.சா.4.திரு.அப்துல்சமத் த.பெ.அரப்ஷாராவுத்தர்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

சுலைக்காபீவி மற்றும் அரப்ஷாராவுத்தர் தம்பதியினருக்கு மொத்தம் 7 பிள்ளைகள் உள்ளதாக சொல்லும்பட்சத்தில் அதற்கான வாரிசுசான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நிருபிண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டம், 01/125 டி.சா.இமாம் நகர், இனாம் குளத்தூர் என்ற முகவரியில் எவ்வளவு காலமாக குடியிருந்து வருகிறேன் என்றால் 42 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து கருங்காலக்குடியில் இருக்கிறது என்றால் சரிதான்.

2. நிருபண வாக்குமூலம் பத்தி 3 ல் தாவா சொத்து எனது அம்மா சுலைக்காபீவிக்கு வாரிசு அடிப்படையில் கிடைத்தாக சொல்லும்பட்சத்தில் யாரிடமிருந்து எனது அம்மா சுலைக்காபீவிக்கு வந்தது என்றால் தெரியாது. ஆனால் எனது அம்மாவிற்கு அவரது தகப்பனார் கொடுத்துள்ளார். எனது அம்மாவின் அப்பா பெயர் சீனிராவுத்தர் என்றால் சரிதான். நான் சீனிராவுத்தரை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எனக்கு 10 வயது இருக்கும்போது அவர் இறந்துவிட்டார்..

3. சீனிராவுத்தரின் கடைசி காலங்களில் அவர் எங்கு வாழ்ந்தார், எங்கு வைத்து இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியும். சீனிராவுத்தர் கருங்காலக்குடியில் வைத்து தான் இறந்தார். கடைசி காலத்தில் யார் வீட்டில் இருந்தார் என்றால் அந்த விவரம் தெரியவில்லை.

சீனிராவுத்தரின் கடைசி காலங்களில் 1 ம் பிரதிவாதி கருப்பையா என்பவர் தாவா சொத்தில் வைத்து அவரை பார்த்து வந்தார் என்றாலும், சீனிராவுத்தர் என்பவரது மச்சினன் தொத்தகுதிரை என்பவர் மூலம் இஸ்ஸாமிய முறைபடி அந்திம காரியங்கள் செய்தார் என்றால் யார் அந்திம காரியங்கள் செய்தார்கள் என்று தெரியாது. ஆனால் தொத்தகுதிரை என்பவர் சீனிராவுத்தர் என்பவருக்கு உறவினர் அல்ல.

4. எனது அம்மா சீனிராவுத்தர் என்பவரை பராமரிக்க முயற்சி செய்தபோதும் எனது அப்பா அரப்ஷாராவுத்தர் சம்மதிக்காத காரணத்தினால் எனது அம்மா 1 ம் பிரதிவாதி கருப்பையா என்பவரை அணுகி அவர்மூலமாகதான் தாவா சொத்தில் வைத்து சீனிராவுத்தரை பராமரித்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி கருப்பையா கூலி வேலைக்கு எங்களுக்கு வருவார். அந்த பகுதியில் உள்ள அனைவருக்கும் வருவார்.

5. நிருபண வாக்குமூலம் பத்தி 5 ல் எங்கள் பொது குடும்ப சொத்துகளை பொறுத்து எனது அண்ணன் அப்பாஸ், எனது தகப்பனார் உயிருடன் உள்ளபோது 1978 ஆம் ஆண்டு தனது பாகத்தை பிரித்து கொண்டு சென்றுவிட்டார் என்று சொல்வது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேலும் எங்கள் சகோதரிகளுக்கு பொது குடும்ப வருமானத்தை வைத்தும், பொது குடும்ப சொத்துகளை விற்றும் நல்ல முறையில், நல்ல சீதனங்கள் கொடுத்து திருமணம் செய்து கொடுக்கப்பட்டது சம்மந்தமாக எனது இரண்டு சகோதரிகளும் நல்ல முறையில் திருமணம் செய்து கொடுத்துள்ளதால் பொது குடும்ப சொத்தில் பாகம் வேண்டாம் என்று ஏதேனும் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மேலும் நிருபண வாக்குமூலத்தில் பின்னிட்டு எங்கள் சகோதரர் தாசில்தின்

அவரது பாகத்தினை பிரித்து கொடுக்கும்படி பிரச்சனை செய்தததை தொடர்ந்து எங்கள் சகோதரர்கள் நால்வரும் அதாவது 1. அப்துல்சமத், 2. தாசில்தின், 3. பக்ரூதின். 4. கமரூதின் நான்குபேர்களும் கடந்த 1986 ஆம் வருடம் டிசம்பர் மாதம் எங்கள் பாக சொத்துகளை பொறுத்து குடும்ப ஏற்பாட்டு ஆவணம் ஏற்படுத்தி கொண்டோம் என்று சொல்வது சம்மந்தமாக தாசில்தின் மேற்படி பாகபிரிவினை சம்மந்தமாக எங்களிடம் ஒப்புதல் தெரிவித்தாரா என்றால் தாசில்தின் எனது தகப்பனார் இருக்கும்போதே சொத்தை வாங்கி கொண்டு சென்றுவிட்டார். மீதமுள்ள நாங்கள் மூவரும் எனது தகப்பனார் 1987 ஆம் ஆண்டு இறந்தபின்பு சொத்துகளை பிரித்து கொண்டோம். தாசில்தின் நாங்கள் பாகபிரிவினை செய்தது தெரியாது என்று குறிப்பிட்டு ஒரு வழக்கறிஞர் அனுப்பினார் என்றால் எனக்கு தெரியாது.

6. தாசில்தின் சிங்கபூரில் இருந்த காலத்தில் மேற்படி ஆவணம் குறித்து தெரிந்து தனது மனைவி மூலம் காவல் துறை கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பினாரா என்றால் தெரியாது. தாவா சொத்தை பொறுத்து 1986 ஆம் ஆண்டு ஒரு வெண்ணிலை பத்திரம், 1988 ஆம் ஆண்டு ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம், 2010 ஆம் வருடம் எனது தம்பி மனைவி ரசியாபேகத்திற்கு கிரைய ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டதாக சொல்லும் சமயத்தில் எங்கள் வசம் பட்டா எதுவும் இருந்ததா என்றால் தெரியாது.

7. 2010 ஆம் ஆண்டு ரசியாபேகத்திற்கு கிரையம் கொடுத்த சொத்தை 13.07.2011 ஆம் தேதி வாதி பெயருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நிருபண வாக்குமூலத்தில் பத்தி 7 ல் எங்கள் சொத்துகளில் நாங்கள் எந்த ஒரு காலத்திலும் பண்ணை ஆள்களை வைத்து வேலை செய்தது கிடையாது என்று எதற்காக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அந்த

அளவிற்கு எங்களுக்கு சொத்துகள் கிடையாது. நாங்களே தான் வேலை செய்வோம் என்பதற்காக சொல்லியுள்ளேன். மேலும் எங்கள் சொத்துகளில் வழக்கு சொத்துகளையும் அதனை சுற்றியுள்ள பிற சொத்துகளையும், நாங்கள் வாதியின் மாமனாரான சங்கரன்பிள்ளையிடம் ஒத்தி வைத்து அவர் விவசாயம் செய்து வந்தார் என்று சொல்லியுள்ளது சம்மதமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது.

8. தாவா சொத்தை பொறுத்து சீனிராவுத்தர் என்பவரது பண்ணை பணியாளரான 1 ம் பிரதிவாதி கருப்பையா என்பவர் தான் ஆதிகாலத்தில் இருந்து சீனிராவுத்தர் அந்திம காலம் வரை வைத்து பராமரித்து கூரை செட்டை ஓட்டு செட்டாக மாற்றி வாழ்ந்து வருகிறார் என்றாலும், எங்களிடம் சொத்து சம்மதமாக பட்டா, சிட்டா எதுவும் கிடையாது என்றாலும், தாவா சொத்துகளை எந்த காலத்திலும் நாங்கள் அனுபவித்தது கிடையாது என்றாலும் வழக்கிற்காக கற்பனையான விவரங்களை பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.P.மகாராஜன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.